	ரோயல் கல்லூரி –கொழும்பு 07 Royal College – Colombo 07	
	மூன்றாந் தவணைப் பரீட்சை – 2022 (2023) **3rd Term Examination – 2022 (2023)**	42 | T | I,II
	கர்நாடக சங்கீதம் தரம் 10 Carnatic Music Grade 10	**நேரம் 3 மணித்தியாலம்** Time 3 Hours

பகுதி - 1

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக**
- **சரியான விடையின் கீழ் கோடிடுக**

1) மங்கல நிகழ்வுகளில் இசைக்கப்படும் துளைக்கருவி
   1. நாதஸ்வரம் 11. சக்ஸபோன் 111. புல்லாங்குழல் IV. மகுடி

2) தாளத்தின் ஆறு அங்கங்களும்,
   1. திரியாங்கம் 11. ஷடாங்கம் 111. லகு IV. த்ருதம்

3) "சங்கீர்ண" என்ற விருதைப் பெற்ற மன்னன்
   1. நெடுமாறன் 11. ராஜராஜசோழன்
   111. மகேந்திரவர்மன் IV. கரிகாலன்

4) 65வது மேளகர்த்தா இராகம்
   1. பந்துவராளி 11. சங்கராபரணம் 111. கரஹரப்பிரியா IV. கல்யாணி

5) ஐந்து அங்கங்களைக் கொண்ட உருப்படி
   1. பதம் 11. இராகமாலிகை 111. ஜாவளி IV. வர்ணம்

6) பஞ்சபுராண ஒழுங்கில் மூன்றாவதாகப் பாடப்படுவது
   1. புராணம் 11. திருப்பல்லாண்டு 111. திருவிசைப்பா IV. தேவாரம்

7) சிருங்கார ரஸத்தை வெளிப்படுத்தும் உருப்படி
   1. இராகமாலிகை 11. பதம் 111. தில்லானா IV. ஜதீஸ்வரம்

8) மத்தியமாவதி இராகத்தில் அமைந்த கீதம்
   1. சிவபெருமானே 11. அன்பேதான் 111. சாமிநாதா IV. வரவீணா

9) கண்ட ஜாதி அடைதாளத்தின் மொத்த அட்சர எண்ணிக்கை
   1. 14 11. 12 111. 16 IV. 10

10) "சௌக வர்ணம்" என அழைக்கப்படுவது
   1. தில்லானா 11. பதவர்ணம் 111. தானவர்ணம் IV. பதம்

11) ஜாதி பேதம் அடையும் அங்கம் எது?
   1. த்ருதம் 11. காகபாதம் 111. லகு IV. அனுத்ருதம்

12) ஏழு தந்திகளை உடைய இசைக்கருவி,
   1. தம்புரா 11. யாழ் 111. வயலின் IV. வீணை

13)ஆரோகண – அவரோகணங்களில் நான்கு ஸ்வரங்களை எடுக்கும் இராகம்
   1. ஸ்வராந்தரம் 11. ஷாடவம் 111. ஔடவம் IV. சம்பூர்ணம்

kalvi.lk

14) ஒரு அங்கம் மட்டும் உடைய தாளம்
1. ஆதி 11. ரூபகம் 111. ஏகம் IV. மட்டியம்

15) தோஷ நிவாரணியாக இசைக்கப்படும் இராகம்
1. மத்தியமாவதி 11. பிலஹரி 111. கமாஸ் IV. ஹம்சத்வனி

16) தற்காலத்தில் காணப்படும் பண்களின் எண்ணிக்கை
11. 105 11. 175 111. 36 IV. 24

17) அலங்காரத்திற்கு அடுத்ததாக கற்பிக்கப்படும் சாகித்தியரூபமான அப்பியாசகான உருப்படி
1. சஞ்சாரிகீதம் 11. ஜதீஸ்வரம் 111. ஸ்வரஜதி IV. கீர்த்தனை

18) உபபல்லவி என
அழைக்கப்படுவது,
1. பல்லவி 11. வர்ணத்தின் சரணம்
111. அனுபல்லவி IV. கீதம்

19) கச்சேரிகளில் (அரங்க நிகழ்வுகளில்) இசைக்கப்படும் உருப்படிகள்
1. வைதீக கான உருப்படி 11. சபா கான உருப்படி
111. அப்பியாச கான உருப்படி IV. லௌகீக கான உருப்படி

20) ''தந்தனத்தோம்'' என்று சொல்லியே என ஆரம்பிக்கும் அரங்க நிகழ்வு
1. வில்லுப்பாட்டு 11. சொற்பொழிவு
111. கதாப்பிரசங்கம் IV. பேச்சு

21) ''வாத்திய த்ரயம்'' என சிறப்பாக அழைக்கப்படுபவை
1. வீணை , தம்புரா , வயலின் 11. வீணை , வேணு , மிருதங்கம்
111. தபேலா , மிருதங்கம் , தவில் IV. தவில் , நாதஸ்வரம் , தம்புரா

22) பாடத்திட்டத்தில் மாணவர்களது தனித்திறமையை வெளிப்படுத்துவது,
1. செயன்முறை 11. நயத்தல் 111. அறிமுறை IV. ஆக்கத்திறன்

23) ''சந்தப்பாலர் பெருமான்'' எனப் போற்றப்படுபவர்
1. பாபநாசம்சிவன் 11. அருணகிரிநாதர் 111. சம்பந்தர் IV. சுந்தரர்

24) அதிக நெடில் ஸ்வரங்களைக் கொண்ட அலங்காரம்
1. துருவ தாள அலங்காரம் 11. மட்டிய தாள அலங்காரம்
111. திரிபுடை தாள அலங்காரம் IV. அட தாள அலங்காரம்

25) ஆதி தாள வர்ணம் ஒரு ஆவர்த்தனத்திற்குக் கொண்டிருக்கும் அட்சரங்கள்,
1. 16 11. 24 111. 32 IV. 48

26) முத்துத்தாண்டவர் பதங்கள் எவ்வாறு சிறப்பித்துக் கூறப்படுகிறது,
1. தாஸர் பதங்கள் 11. பேரின்ப பதங்கள்
111. கீர்த்தனை மாலை IV. தொகுதிக் கீர்த்தனை

27) நாதஸ்வரம் எத்தனை வகைப்படும்
1. 2 11. 3 111. 4 IV. 5

28) ''தாரரந்திரம்'' என்னும் பாகத்தை கொண்ட வாத்தியம்
1. வீணை 11. வயலின் 111. நாதஸ்வரம் IV. புல்லாங்குழல்

kalvi.lk

29) வில்லுப்பாட்டு நிகழ்வில் பிரதானமானவர்

1. மிருதங்கம் வாசிப்பவர் 11. கடம் வாசிப்பவர்

111. வில்லில் அடிப்பவர் IV. பிற்பாட்டு பாடுபவர்

30) “நேத்ரபஸ்ரீ” என அழைக்கப்படும் இராகம்,

1. கல்யாணி 11. தோடி 111. சங்கராபரணம் IV. மத்தியமாவதி

31) மொத்த அட்சரம் 18 ஐ கொண்ட தாளம்

1. மிஸ்ர அட 11. கண்ட துருவம் 111. சங்கீர்ணஜம்பை IV. கண்ட மட்டியம்

32) அப்பியாச கானத்திற்கும் சபா கானத்திற்கும் பொதுவான உருப்படி

1. வர்ணம் 11. கீதம் 111. தில்லானா IV. பதம்

33)“திறத்திறம்”எனப்படுவது,

1. ஔடவம் 11. ஸ்வராந்தரம் 111. ஷாடவம் IV. பாஷாங்கம்

34) தமிழிசையில் “நிலை” எனப்படுவது,

1. ஸ்வரம் 11. சுருதி 111. நாதம் IV. ஸ்தாயி

35) “முருகா….. ” எனும் தான வர்ணத்தின் இராகம்,

1. மத்தியமாவதி 11. மோகனம் 111. சாவேரி IV. பௌளி

36) “பக்திநெறிக்காலம்” என அழைக்கப்படுவது,

1. சங்ககாலம் 11. சங்கமருவிய காலம்

111. பல்லவர் காலம் IV. சோழர் காலம்

37) தமிழிசையில் “தாரம்” என்பதைக் குறிக்கும் ஸ்வரம்,

1. ரிஷபம் 11. காந்தாரம் 111. நிஷாதம் IV. தைவதம்

38) “பழம் பஞ்சுரம்” எனும் பண்ணுக்கு இணையான இராகம்

1. தோடி 11. பூபாளம் 111. மோகனம் IV. சங்கராபரணம்

39) நாதம் எத்தனை வகைப்படும்

1. 2 11. 4 111. 5 IV. 6

40) 1 1 0 0 என்ற அங்க அடையாளத்தையுடைய தாளம்,

1. அடதாளம் 11. மட்டிய தாளம் 111. ரூபகதாளம் IV. ஏகதாளம்

(1X40=40 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

kalvi.lk

பகுதி -11

- **முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக**

1) .

1. சுருதி எத்தனை வகைப்படும்?
11. சபாகான உருப்படிகள் 2 தருக
111. எல்லா ஸ்வரங்களும் தீவிரமாக விளங்கும் இராகம் எது?
IV. நாதத்தின் வகைகளைத் தருக.
V. அநிபந்தம் என்றால் என்ன?
VI. தாளத்தின் 3 அங்கங்களை எல்வாறு அழைப்பர்
VII. திஸ்ர நடைக்குரிய சொற்கட்டு யாது?
VIII. மத்தியமாவதி இராகத்தின் ஆரோகண – அவரோகணத்தைத் தருக.

(12 புள்ளிகள்)

2) .

1. மங்கள வாத்தியமாக விளங்கும் துளைக்கருவி யாது?
11. அவ் வாத்தியத்தின் படத்தை வரைந்து பகுதிகளைக் குறிப்பிடுக.
111. அவ் வாத்தியத்தின் அமைப்பினை விளக்குக.
IV. அவ் வாத்தியத்தை வாசிப்பதில் பிரபல்யமான இந்திய இசைக்கலைஞர் இருவரின் பெயர்களைக் குறிப்பிடுக

(12 புள்ளிகள்)

3) பின்வரும் இராகங்களில் ஒன்றிற்கு விரிவான இரட்சணம் எழுதுக

1. மத்தியமாவதி
11. கரஹரப்பிரியா

(12 புள்ளிகள்)

4) கோபால கிருஷ்ண பாரதியாரின் வாழ்க்கை வரலாறு, இசைப்பணி பற்றி பின்வரும் விடயங்களின் கீழ் ஆராய்க

1. வாழ்ந்த காலம்
11. பெற்றோர் இட்ட பெயர் , சிறப்புப் பெயர்
111. வாழ்க்கைச் சம்பவங்கள்
IV. இசைத்தொண்டு
V. இயற்றிய உருப்படிகள்

(12 புள்ளிகள்)

5) பின்வரும் பதங்களுக்கு சிறு குறிப்பு எழுதுக

1. பதம்
11. 35 தாளங்கள்

(12 புள்ளிகள்)

6) 14ம் , 15ம் நூற்றாண்டுகளில் கர்நாடக இசையின் கலாசாரப் பின்னணி பற்றி விரிவாக விளக்குக.

(12 புள்ளிகள்)

7) மத்தியமாவதி இராகத்தில் அமைந்த “முருகா…”. எனும் ஆதி தாள வர்ணத்தின் உத்தராங்கப்

kalvi.lk

பகுதியை முழுமையாக எழுதுக (12 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

kalvi.lk

May

ONLINE CLASSES - 2025

NEW ADMISSIONS

2ம் தவணை வகுப்புகள்

தரம் 6 முதல் O/L வரை

அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் ZOOM APP மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

JOIN NOW

WWW.KALVI.LK

075 287 1457